13 அக்டோபர் 2024
பொதுக்காலம் ஆண்டின் 28 ஆம் ஞாயிறு

NEW WAY OF BEING CHURCH

# newbec

**மண்ணுலகிற்கு உப்பும் உலகிற்கு ஒளியும்:**

ஆன்மீக ஒன்றிப்பில் பங்குகொள்ளும் உணர்வோடு தூதுரைத்தல், கொண்டாடுதல் மற்றும் செவிமடுத்தல் (மத்தேயு 5: 13-16)



மாதாந்திர கருப்பொருள்
ஆயர் மாமன்றத்தை நோக்கிப் பகிரப்பட்டப் பணி

# நான் கிறிஸ்துவனா அல்லது சீடனா?

“சீடன்” என்னும் வார்த்தை அடிப்படையில் ஒரு மாணவர் அல்லது ஆசிரியரைப் பின்பற்றுபவர் என்று பொருள். எனவே கிறிஸ்துவ சீடத்துவம் என்பது இயேசு கிறிஸ்துவின் மாணவர் அல்லது அவரைப் பின்பற்றுபவரைக் குறிக்கிறது. ஒருவர் கிறிஸ்துவராக இருப்பதால் அவர் கிறிஸ்துவின் சீடர் என்று நாம் யூகிக்கலாம். இன்றைய நற்செய்தியில் அது அவ்வாறு இருக்கமுடியாது என்று நமக்கு நினைவூட்டுகிறது.

இயேசுவிடம் வந்த ஒருவர் நிலைவாழ்வை உரிமையாக்கிக்கொள்வதைப் பற்றி அறிய விரும்பினார். இயேசு அவருக்குக் கொடுத்த அறிவுரைகள் மிகவும் தெளிவாக உள்ளன. ஒரு மனிதன் கடவுள் தந்த கட்டளைப்படி வாழவேண்டும். அதன்பிறகு மேலும் ஒரு முன்நிபந்தனையை முன் வைக்கிறார்.: “நீர் போய் உமக்கு உள்ளவற்றை விற்று ஏழைகளுக்குக் கொடும். ....பின்பு வந்து என்னைப் பின்பற்றும்”

வேறுவார்த்தைகளில் சொல்வோமென்றால், கடவுளின் கட்டளைகளை நாம் கடைப்பிடிக்கவேண்டியது மிகவும் முக்கியம் என்றாலும் இது நம்மை இயேசுவின் சீடர்களாக மாற்றவேண்டிய அவசியமில்லை. இது நம்மை ஒரு கிறிஸ்துவன் என்னும் நபராக அல்லது ஒரு ஆன்மீகவாதியாக மாற்றலாம். ஆனால் சீடன் என்பது இதைவிட மேலான ஒன்றை நம்மிடமிருந்து கோருகிறது. முதலில், நம்மிடமிருக்கும் அனைத்தையும் விட்டுவிடவேண்டும். நாம் நினைக்கும் பாதுகாப்பு, சமூக மரியாதை, சுயசார்பு இவை அனைத்தையும் நாம் முழுமையாக துறக்கவேண்டும். இல்லையென்றால் நாம் சீடனாக இருக்கமுடியாது.

இரண்டாவதாக, ஏழைகளுடனும், ஏழைகளுக்காகவும் நாம் அவர்களில் ஒருவராக இருக்கவேண்டும். அவ்வாறு செய்வதன்மூலம், இயேசுவின் கட்டளையான கடவுளை அன்பு செய்வதையும், பிறரை அன்பு செய்வதையும் நாம் வாழ்ந்து காட்டமுடியும். எல்லாவற்றிலிருந்தும் நம்மை விடுவித்துக்கொண்டு, ஏழைகளுக்காக நம்மிடம் இருப்பதை துறப்பதன்மூலம் நாம் கடவுளை மட்டுமே சார்ந்து இருக்கிறோம்.

உண்மையாகவே இயேசுவின் சீடராகவதற்கு ஒரு முக்கிய நிபந்தனை உண்டு. இது ஒரு தீவிரமான அழைப்பு. இதை ஜெர்மனிய இறையியலாளர் மற்றும் போதகர் டீட்ரிச் போன்ஹோஃபர் இவ்வாறு கூறுகிறார். “இயேசு ஒருவரை அழைக்கிறார் என்றால், அவரோடு வந்து இறப்பதற்கான அழைப்பு” ( The Cost of Discipleship)

எனவே, நாம் பெயர் அளவில் “சீடன்” என்றோ அல்லது திருஅவையோடு இணைந்திருந்தால் மட்டும் போதாது. உண்மையான சீடர்களாக இருக்க, நாம் கிறிஸ்துவின் போதனைகள் மற்றும் மதிப்பீடுகளின்படி வாழவேண்டும். அதுமட்டும் அல்ல; அந்த அழைப்பு நம்மை மேலும் முந்திச் செல்ல அழைக்கிறது. நம்மிடம் உள்ள அனைத்தையும் இழக்க நாம் தயாராய் இருக்கவேண்டும். மற்றும் மற்றவர்களுக்குப் பணிசெய்வதில் நாம் முழுமையாக கடவுளைச் சார்ந்திருக்கவேண்டும்.

எனவே நம்மையே நாம் கேட்டுக்கொள்வோம். “நான் ஒரு கிறிஸ்துவனா அல்லது சீடனா? ✣

**கேட்க செவி உடையோர் திருச்சபைகளுக்குத் தூய ஆவியார் கூறுவதைக் கேட்கட்டும்.**

(திருவெளிப்பாடு: 2:29)







**இன்றைய இறைவார்த்தை:**

ஞானநூல்: 7:7-11

திபா: 90: 12-17

எபிரேயர்: 4: 12-13

மாற்கு 10: 17-30 (அ) 10: 17-27

INTERNAL CIRCULATION ONLY
BUL 41/2024

**Published by:** Archdiocesan Pastoral Institute (API) | **Email:** api@archkl.org